[6th April 1960

THE HON. SRI P. KAKKAN: (a) This Government have no information.

(b) Does not arise.

SRI N. K. PALANISAMI : இப்படி வெகுகாலமாக வட இந்தியாவில் ஓடுகிற நதிக்கும், தென்னிந்தியாவில் ஓடுகிற நதிக்கும் சம்பந்தம் செய்யப் போவதாகப் பத்திரிகையில் அடிக்கடி சொல்லப்படுகிறது. ஆகவே இந்தத் திட்டம் மத்திய சர்க்காரிடம் எந்தக் கட்டத்தில் இருக்கிறது என்று ஆராய்ந்து அதற்கான நடவடிக்கையை அரசாங்கம் எடுக்குமா என்று கேட்கிறேன் ?

THE HON. SRI P. KAKKAN : இதைப்பற்றி மத்திய அரசாங்கத்திற்கு எழுதியிருக்கிறது. முதலில் மினிஸ்ட்ரி ஆப் இர்ரிகேஷன் அண்டு பவர்-க்கு எழுதினோம். அவர்கள் மினிஸ்ட்ரி ஆப் டிரான்ஸ்போர்ட்டுக்கு எழுதச் சொன்னார்கள். இவர்களுக்கு எழுதியிருக்கிறோம். எந்தவிதமான தகவலும் இல்லை. பழைய ரெக்கார்டைப் பார்த்து ஏதாவது தகவல் இருந்தால் எழுதுவதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

SRI A. GOVINDASAMY : ஆந்திர பிரதேசத்திலிருந்து கோதாவரி, கிருஷ்ணா நதி உபரி தண்ணீரை சென்னை மாநிலத்திற்குத் திருப்புவதற்கு, நமது அரசாங்கம் ஆந்திர அரசாங்கத்துடன் ஏதாவது பேச்சு வார்த்தை நடத்துகிறதா ? இல்லை என்றால் இனியாகிலும் இதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN : இதற்குத் தனியாகக் கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

Free education to the poor.

* 590 *Q.*—SRI S. LAZAR: Will the Hon. the Minister for Finance be pleased to state the year from which free education will be given to the poor up to S.S.L.C.?

THE HON. SRI C. SUBRAMANIAM: The question of imparting free education to poor pupils up to the S.S.L.C. is under consideration in connection with the Third Five-Year Plan.

SRI S. LAZAR : அப்படி இலவசப் படிப்பு கொடுப்பதனால் சர்க்காருக்கு ஏற்கெனவே இருக்கும் செலவிற்கு எவ்வளவு அதிகமான செலவு ஏற்படும் என்று அறிய விரும்புகிறேன் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது அதற்கான கணக்கு இல்லை.

SRI K. ANBAZHAGAN : கனம் கல்வி அமைச்சர் பேசும்போது இந்த இலவசக் கல்வித் திட்டத்தை அண்மையில் கொண்டுவரப்போவதில்லை என்ற கருத்தை தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் கனம் முதல் அமைச்சர் அவர்கள் என் ஆட்சிக் காலத்திலேயே கொண்டுவருவேன் என்று கூறுகிறார்கள். இந்த ஆட்சிக்கு இன்னும் இரண்டு ஆண்டு காலம் தானே இருக்கிறது. அதற்குள் இது நிறைவேறுமா ? அல்லது கல்வி அமைச்சர் கூறியதுபோல் காலம் கடத்தப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அண்மையில் என்றால் 2, 3 மாதங்களில் இல்லை என்று சொன்னேன். அடுத்த மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தில் இது எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்ல விரும்புகிறேன்.

SRI K. VINAYAKAM: May I know whether this scheme would be implemented at least before the next general elections ? (Laughter.)

MR. SPEAKER: No answer.